www.Padasalai.Net www.TrbTnpsc.com

T

# முழு ஆண்டு பொதுத் தேர்வு - 2025

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள்: 100

பகுதி - I

14×1=14

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:-

1) மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது
அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங்உட்டான் ஈ) கிரேட் ஏப்ஸ்

2) மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த செய்திகளை தன் குறிப்புகளால் அளித்தவர்
அ) மார்க்கோபோலோ ஆ) ஃபாஹியான் இ) மெகஸ்தனிஸ் ஈ) செல்யூகஸ்

3) தக்காண சுல்தானியங்கள் ________ ஆல் கைப்பற்றப்பட்டன
அ) அலாவுதீன் கில்ஜி ஆ) அலாவுதீன் பாமன்ஷா இ) ஔரங்கசீப் ஈ) மாலிக்காபூர்

4) "தொண்ணூற்றைந்து கொள்கைகள்" களை எழுதியவர் யார்?
அ) மார்டின் லூதர் ஆ) ஸ்விங்லி இ) ஜான்கால்வின் ஈ) தாமஸ் மூர்

5) எக்கண்டுபிடிப்பு பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்தது?
அ) உருட்டாலைகள் ஆ) பஞ்சு கடைசல் இயந்திரம்
இ) ஸ்பின்னிங் மியூல் ஈ) இயந்திர நூற்புக் கருவி

6) கடல்தூண்கள் உருவாவதற்கு காரணம்
அ) கடல் அலை அரித்தல் ஆ) ஆற்றுநீர் அரித்தல்
இ) பனியாறு அரித்தல் ஈ) காற்றின் படியவைத்தல்

7) வளிமண்டலத்தில் கீழாக உள்ள அடுக்கு ________ ஆகும்
அ) கீழடுக்கு ஆ) மீள் அடுக்கு இ) வெளி அடுக்கு ஈ) இடை அடுக்கு

8) புவியின் குளர்ச்சியான பல்லுயிர்த் தொகுதி
அ) தூந்திரா ஆ) டைகா இ) பாலைவனம் ஈ) பெருங்கடல்கள்

9) கீழ்க்காணும் சொற்றொடர்களில் எது தவறு?
அ) தீ விபத்திலிருந்து தப்பிக்க நில் ! விழு ! உருள் !
ஆ) விழு ! மூடிக்கொள் ! பிடித்துக் கொள் ! என்பது நிலநடுக்கத் தயார் நிலை
இ) "கடல் நீர் பின்வாங்கிச் சென்றால் நீங்கள் உயரமான பகுதிகளை நோக்கி ஓடுங்கள்"
ஈ) துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டால் தரையில் கிடைமட்டமாக படுத்துக்கொண்டு தலையையும் கழுத்தையும் மூடிக்கொள்ளவும்

10) பிரதமரை நியமிப்பவர் / நியமிப்பது
அ) மக்களவை ஆ) மாநிலங்களவை இ) சபாநாயகர் ஈ) குடியரசுத்தலைவர்

11) நோட்டா (NOTA) முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 2012 ஆ) 2013 இ) 2014 ஈ) 2015

12) ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றவர் ________ ஆவார்
அ) ஆணையர் ஆ) மாவட்ட ஆட்சியர் இ) பகுதி உறுப்பினர் ஈ) மாநகரத் தலைவர்

13) மூன்றாம் துறையில் அடங்குவது
அ) போக்குவரத்து ஆ) காப்பீடு இ) வங்கியியல் ஈ) அனைத்தும்

14) இவற்றுள் உணவல்லாத பயிர் எது?
அ) கம்பு ஆ) கேழ்வரகு இ) சோளம் ஈ) தென்னை

பகுதி - II

10×2=20

கீழ்க்கண்ட வினாக்களுள் ஏதேனும் பத்தினுக்கு விடையளி. (வினா எண். 28 கட்டாய வினா)

15) தொல்லியல் ஆய்வுக்களங்கள் கடந்தகால வரலாற்றுச் சான்றுகளை அளிக்கின்றன - உன் கருத்துக்களை முன் வைக்கவும்.
16) சிறுகுறிப்பு தருக - 'சீனப்பெருஞ்சுவர்'
17) பட்டு வளர்ப்பு என்றால் என்ன?
18) தொழிற்புரட்சியின் இரு முக்கிய விளைவுகளைக் கோடிட்டுக் காட்டுக
19) இந்திய பொருளாதாரம் காலனிமயமாக்கப்பட்டதின் மூன்று கட்டங்களைக் கூறு.
20) ஆழிப்பேரலைகள் என்றால் என்ன?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



21) 'நீர்க்கோளம்' - பொருள் கூறு
22) சூழ்நிலை மண்டலம் என்றால் என்ன?
23) நிலவரைபடத்தின் கூறுகள் யாவை?
24) போக்சா (POCSO) - வரையறு
25) இருசக்கர வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணிவதன் நன்மைகள் யாவை?
26) குழந்தைகளையும், 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களையும் ஏன் பணிக்குழுக்களாக கருதக்கூடாது?
27) மிகக்குறைவான எண்ணிக்கையில் வெளி இடப்பெயர்வைக் கொண்ட தமிழ்நாட்டிலுள்ள நான்கு மாவட்டங்களின் பெயர்களைக் கூறு.
28) 'நுண்ணீர் பாசனத் தொழில்நுட்பம்' - பற்றிக் கூறு

பகுதி - III

**கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் பத்தினுக்கு விடையளி. (வினா எண்.42 கட்டாய வினா) 10×5=50**

29) கோடிட்ட இடத்தை நிரப்புக.
   i) ஆங்கிலேயரின் முக்கிய வருவாயாக திகழ்ந்தது ________
   ii) மிகப்பரந்த புவிச்சூழ்நிலை மண்டலத்தை ________ என்கிறோம்
   iii) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு ________
   iv) பெண்கள் அதிகஅளவில் இடம் பெயர்வதற்கான காரணம் ________
   v) உலக சுற்றுச்சூழல் தினம் ________
30) அ) வேறுபடுத்துக:- 1. சவானா - தூந்திரா 2. புவி மாதிரி - நிலவரைபடம்
   ஆ) காரணம் கூறு:- மூடுபனி போக்குவரத்துக்கு ஆபத்தாக உள்ளது.
31) ஹீரோகிளிபிக்ஸ், க்யூனிபார்ம் - இவற்றை அவற்றின் முக்கிய கூறுகளுடன் விளக்கு
32) மங்கோலியர்கள் என்பவர் யார்? அவர்கள் சீனாவை எவ்வாறு ஆட்சி செய்தனர்?
33) அமெரிக்காவில் இரண்டாவது தொழிற்புரட்சி நடைபெற்றதற்கான காரணங்களை வரிசைப்படுத்துக.
34) பனியாறு என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கு
35) புவியில் உள்ள நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதியை விவரி?
36) தீ விபத்தின்போது என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றி குறிப்பு வரைக.
37) அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?
38) சாலை விபத்துக்கான காரணிகளை விவரி?
39) புதுப்பிக்கதக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்கதகாத வளங்கள் வேறுபடுத்துக
40) தமிழகத்தின் நீர் ஆதாரம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
41) கி.பி.1750 - 1810 வரையிலான ஆண்டுகளுக்கு காலக்கோடு வரைந்து ஏதேனும் 5 முக்கிய நிகழ்வுகளைக் குறிக்க
42) பின்வரும் இடங்களை கொடுக்கப்பட்ட உலக வரைபடத்தில் குறிக்க.
   1. இங்கிலாந்து 2. சீனா 3. அமெரிக்க ஐக்கிய நாடுகள்
   4. நைல் ஆறு 5. நன்னம்பிக்கை முனை

பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 2×8=16**

43) சங்ககாலத்தில் தொழில்களும் கைவினைக்கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?
   (அல்லது)
   வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி விளக்கு
44) பின்வருவனவற்றை உலகப்படத்தில் குறி
   1. ஆல்ப்ஸ் மலைத்தொடர் 2. புவி அதிர்ச்சி மண்டலம் 3. ஆர்டிக் பெருங்கடல்
   4. ஜப்பான் 5. பிளவு பள்ளத்தாக்கு 6. டான்ஸ்
   7. ஏதேனும் ஒரு வெப்பப்பாலை 8. பிரேசில் நீரோட்டம்
   (அல்லது)
   1. இமயமலை 2. பசிபிக் நெருப்பு வளையம் 3. அண்டார்டிகா 4. ஆஸ்திரேலியா
   5. ஏதேனும் ஒரு சுண்ணாம்பு பாறை பிரதேசம் 6. பிரெய்ரி புல்வெளி
   7. ஏதேனும் ஒரு குளிர்பாலைவனம் 8. அலாஸ்கா நீரோட்டம்.

********

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com